முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 617**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

07.06.2021, திங்கட்கிழமை

1. அறமெனும் சூட்சும மாதவசியே
அண்ணலாக கலியுகத்தை காக்கவேண்டி
வரம்பெற்றுவந்த ஆறுமுக அரங்கனே
வள்ளலே வாழுகின்ற ஞானியே
2. ஞானியே உந்தனுக்கு சுப்ரமணியர்யானும்
ஞாலமதில் ஞானஅறிவுரை ஆசி
கனிவுகொண்டு பிலவ விடைதிங்களில்
கண்டுரைப்பேன் மேல்நிலை பெறுதல்வேண்டி
3. வேண்டியே அரங்கன் தர்மம்
மேலான வழிகாட்டும் உலகமக்களுக்கு
தொண்டுடன் மக்களுக்கு நன்னடத்தை
தூய வழிகாட்டி அருள்புரியும்
4. அருள்தரும் அரங்கன் கொள்கையை
அகிலத்தார் ஏற்று தொடர்ந்துவர
இருளெனும் துன்பங்கள் அனைத்தும்விலகி
இந்தஉலகம் ஞானஒளி பெற்றுசிறக்கக்கூடும்
5. கூடவே அரங்கன் தொண்டுவழி
குவலயம் தொடர்ந்து வருகவருக
பேரிடர்கள் யாவும் அகன்றோடி
பெரும்பாதுகாப்பாய் அகிலம் காணும்
6. காணவே அரங்கன் சூட்சுமசக்தியாய்
கந்தவேலன் யான் அருள்புரிந்துவர
ஞானமாக அரங்கன்வழி தொடரதொடர
ஞானயுகமாற்றம் சடுதி காணக்கூடும்
7. கூடவே ஓங்காரக் குடிலில்
குறையில்லா சூட்சும சக்திக்குள்
ஈடேறி உலகோர் இணைந்துவர
இணைந்து அரங்கன்சீடர்களாகி தொண்டுசெய்ய
8. செய்யவே கலியில் மாற்றமுண்டு
சுப்ரமணியன் என்அருளும் ஆசியும்பெற்று
அய்யமற அழியாமை பெறுவர் உலகோர்
அரங்கன்வழி வாரீர் சடுதி மேன்மைகொள்ள

ஞானஅறிவுரை ஆசி முற்றே —சுபம்—

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.